


காரைக்குடியில் நடைபெற்ற சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும்,கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றுகிறார். இதில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ,மாவட்ட அவைத்தலைவர் அ.கணேசன்,மாவட்ட துணைசெயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்து, செயற்குழு உறுப்பினர் சே.முத்துதுரை ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

### நாங்குநேரியில் பள்ளி மாணவர் -மாணவி மீது தாக்குதல்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் ஆறுதல்! தி.மு.க. சார்பில் ரூ.2 லட்சம் நிதி!

## அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் வழங்கினார்!

நெல்லை.ஆக.13-

நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் வீடு புகுந்து சக மாணவர்களால் ஆயுதம் கொண்டு தாக்கி படுகாயம் ஏற்படுத்தப்பட்ட பள்ளி மாணவன் மற்றும் அவரது சகோதரி நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி பல் நோக்கு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசி மூலம் பாதிக்கப்பட்ட மாணவர்களின் தாயார் அம்பிகாவிடம் தொலைபேசியில் ஆறுதல் கூறினார்கள்.தி.மு.க சார்பில் ரூபாய் 2 லட்சம் நிதி உதவியை நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

அப்போது சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு. நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன் கான்,சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல்வகாப்,ரூபி மனோகரன், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாநகர செயலாளர் சுப்பிரமணியன்,மேயர் சரவணன், மருத்துவக் கல்லூரி டீன் ரேவதி பாலன், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சிலம்பரசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் வீடு புகுந்து சக மாணவர்களால் ஆயுதம் கொண்டு தாக்கியதில் படுகாயம் ஏற்படுத்தப்பட்ட பள்ளி மாணவன் அவரது சகோதரி ஆகியோர் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மருத்துவக் கல்லூரி பல் நோக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மாணவர் அவரது சகோதரி ஆகியோரை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் நேரில் சந்தித்து மாணவ மாணவி மற்றும் அவரது தாயார் அம்பிகாவிடம் ஆறுதல் கூறினர்.

அமைச்சர் தங்கம் தென்னரசு அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அம்பிகாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறி தமிழக அரசு தங்களது குடும்பத்திற்கு எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்றும் தெரிவித்தார்கள்.

பின்னர் பாதிக்கப்பட்ட மாணவனின் குடும்பத்திற்கும் அரிவாள் வெட்டு சம்பவத்தை பார்த்து அதிர்ச்சியில் உயிரிழந்த முதியவர் கிருஷ்ணன் குடும்பத்திற்கும் தி.மு.க சார்பில் ரூபாய் 2 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.

அதன் பின்னர் அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

நாங்குநேரியில் நடந்த சம்பவம் குறித்து தகவல் வந்தவுடன் முதலமைச்சர் என்னை நேரில் சென்று ஆறுதல் தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்கள். முதலமைச்சரும் நேரடியாக பாதிக்கப்பட்ட மாணவனின் தாயிடம் தொலைபேசியில் பேசினார்கள்.

குழந்தைகளின் கல்வி தடை படாத அளவில் நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அரசு துணை நிற்கும் எனவும் முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்துள்ளார்கள். தேவையான உயர் சிகிச்சை அளிக்கவும் மருத்துவர்களிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. குற்ற செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அரசு இந்த விவகாரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

# தி.மு.க.கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை
## மாவட்ட அமைப்பாளர்-துணை அமைப்பாளர்கள் நியமனம் (இரண்டாவது பட்டியல்)

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு

**கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க.கலைஇலக்கியப்பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள்பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.**

**சென்னை மேற்கு மாவட்டம்**

தலைவர்-ப.கோபாலகிருஷ்ணன்,10 வதுகுறுக்குத்தெரு, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024.

துணைத்தலைவர்-ச.சீனிவாசன்,7-இ,டிப்போதெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

அமைப்பாளர்-**திருமலை பொன்னுரங்கம்**,பி.எஸ்சி.,17, சோலையப்பன்தெரு, தி. நகர்,சென்னை - 600 017.

துணைஅமைப்பாளர்கள்-எஸ்.பிரசன்னா,43/35, மேற்குநமச்சிவாயபுரம், சூளைமேடு, சென்னை - 600 094. வே.சுதாகர் 27/12, பஜனைகோவில் 4 தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.எஸ். ரமேஷ்,சி151, எம். எம். டி ஏ. காலனி, அரும்பாக்கம், சென்னை - 600 106.கு. லோகேஷ்,65 / 15 , 4வதுகுறுக்குத் தெரு, ஜோதிஅம்மாள்நகர்பகுதி - 2, செனாய்நகர், சென்னை - 600 030.ஓய். ராமச்சந்திரன்,15, கேனால்தெரு,திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.ச. ரவீந்திரன்,101, தபால்தந்தி குடியிருப்பு, ஜெகஜீவன்ராம்நகர்,ராயப்பேட்டை, சென்னை - 600 014.து. சிவக்குமார்,16/31, சிட்டிபாபுதெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.இரா. கோவிந்தன்,16, வெள்ளாளர்தெரு, அமைந்தகரை, சென்னை - 600 029. ஆசிஃப்உசேன்,4, டி. பிளாக், இலாயிட்ஸ்காலனி,ராயப்பேட்டை, சென்னை - 600 014.

**திருப்பூர் வடக்கு மாவட்டம்**

தலைவர்-பழ.வீரப்பன்,480,பழனியப்பன்நிவாஸ்,30வீதி, வி.ஜி.வி. கார்டன், ராக்கிபாளையம்பிரிவு, திருப்பூர் 641 606.

துணைத்தலைவர்-திருமதி.ஆ.கீதா,6,சூசையபுரம்வடக்கு 7வது வீதி, திருப்பூர் 641 601.

அமைப்பாளர்-**ச. ரமேஷ்**,247, நாதம்பாளையம். செம்பியநல்லூர்ஊராட்சி, அவிநாசி 641 654.

துணைஅமைப்பாளர்கள்-மணிகண்டன் (எ) ஏ. எஸ். மணி, 6, அன்புஇல்லம், பண்ணாரிஅம்மன்நகர், சந்திராபுரம், நல்லூர், திருப்பூர்.ஏ. செல்வராஜ், 1/75, கே. ஆண்டிபாளையம்வடக்கு,அவிநாசிபாளையம், பெல்லிகாளிபாளையம், திருப்பூர் 641 665.ராமமூர்த்திஇந்திராநகர், பனப்பாளையம், பல்லடம் 641 664.அ. ஆதவன்,250ஏ, இடுவாய், திருப்பூர் 641 687.

பெ. பொன்னுச்சாமி,3/91, சின்னஓலப்பாளையம், அய்யம்பாளையம்ஊராட்சி, அவிநாசி.

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

தலைவர்-தணிகைஜி. கருணாநிதி,315/35, கச்சேரிசாலை, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி..

துணைத்தலைவர்-ஏ. ராஜசேகர்,445, சத்தியசாய்நகர், கட்டிக்கானபள்ளி, கிருஷ்ணகிரி.

அமைப்பாளர்-**எஸ்.எஸ்.சங்கர்**,131,சிவம்பட்டி,பர்கூர், கிருஷ்ணகிரி.

துணைஅமைப்பாளர்கள்-எஸ். மோதிலால்,74/148 லட்சுமிராவ் தெரு, புதுப்பேட்டை,கிருஷ்ணகிரிமாவட்டம்,எம். ஆனந்தன், 1/117, போகனப்பள்ளி, கிருஷ்ணகிரிமாவட்டம்.ஆர். எஸ். கிரிதர் 41/23, அம்பேத்கர்நகர் 2வதுதெரு, செடியம்பட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம்,எஸ்.கார்த்திகேயன்,கிருஷ்ணகிரிமேற்கு,ஆர். மோகன், காவேரிப்பட்டினம்மேற்கு,கே. பார்த்திபன்,காவேரிப்பட்டினம், பேரூர்,ஆர். சுந்தரராஜன்,316, சின்னமட்டாரபள்ளி, பருகூர். கிருஷ்ணகிரி , என். சி. சிவக்குமார்,செட்டிபள்ளி, ஒரப்பம், பர்கூர், கிருஷ்ணகிரி,அரி, சத்லப்பள்ளி,பர்கூர். எஸ்.அரவிந்தன்,பர்கூர்தெற்குஒன்றியம்,எஸ். கே. ரங்கன்,சாலமாரதுப்பட்டி, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி,கே. ஓ. தேவராஜ்,கோட்டூர்கிராமம், கொடமாண்டபட்டி, மத்தூர்வடக்கு, ஊத்தங்கரை. கே. ஜவகர் ஊத்தங்கரைதெற்குஒன்றியம்.

**மயிலாடுதுறை மாவட்டம்**

தலைவர்-கா.மாரியப்பன்,மாரியம்மன்கோவில்தெரு, சங்கிருப்பு தரங்கம்பாடிவட்டம்.

துணைத்தலைவர்-ஜி.ராகவன்,வடக்குதெரு, கங்காதரபுரம், குத்தாலம்வட்டம்.

அமைப்பாளர்-**டி. ராஜ்குமார்**,பி-3/2, மேலத்தெரு,ஊத்துக்குப்பை, மயிலாடுதுறை.

துணைஅமைப்பாளர்கள்-எம்.உமாசங்கர்,மேலவீதி, திருக்கடையூர், தரங்கம்பாடிவட்டம்.ஏ. ஆனந்தன்,சின்னதெரு, திருநன்றியூர், சீர்காழி,என். இமயவேல்,அரசூர்மெயின்ரோடு, எருக்கூர்அஞ்சல், சீர்காழிவட்டம். ஆர். ஆர். பாபு,குருநகர், சேந்தங்குடி, வள்ளாலகரம், மயிலாடுதுறை.துரை. புகழேந்தி,மேலத்தெரு, கீழையூர்அஞ்சல், தரங்கம்பாடிவட்டம்.என். பாஸ்கரன், திருமஞ்சன வீதி,சீர்காழிவட்டம். ச. தேவா (எ) எஸ். தேவேந்திரன்,மேலத் தெரு, நடுக்கரை, மேலப்பாதிஅஞ்சல்

**தஞ்சை மத்திய மாவட்டம்**

தலைவர்-வி.சண்முவடிவேல்,ஸ்ரீநகர் 1வதுதெரு, எம்.சி. ரோடு, தஞ்சாவூர்.

துணைத்தலைவர்-செ. ஜெயராமன்,மெயின்ரோடு, கூத்தூர், தஞ்சாவூர்.

அமைப்பாளர்-**சி.செல்லப்பா**,திருநல்லூர், ஒரத்தநாடு.

துணைஅமைப்பாளர்கள்-இல.சரவணன்,மேட்டுத்தெரு, செட்டிபாளையம், தஞ்சாவூர்.அய்யா. கார்த்தி, சூரப்பட்டு,சிங்கிப்பட்டி, பூதலூர்.த. குணசேகரன்,கோவிலூர்புதூர், ஒரத்தநாடு.எஸ். ரவிச்சந்திரன்,சி. எஸ். ஐ. ரோடு, தில்லைநகர், புதுப்பட்டினம்,தஞ்சாவூர். என்.சுரேஷ்,பூக்கொல்லை, பிள்ளையார்பட்டி, தஞ்சாவூர்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

தலைவர் -ஏ. முபாரக்,870/ பி 3, 28வதுதெரு, சாந்திநகர், பாளையங்கோட்டை

துணைத்தலைவர்-திருமதி. எஸ். சைபுனிஷா,20, மேத்தாமார் பாளையம் 2வதுதெரு,மேலாப்பாளையம்.

அமைப்பாளர்-**திருமதி. இரா. இராஜகுமாரி**,87, தமிழ்நகர், என். ஜி. ஓ. ஏ. காலனிவிரிவாக்கம், திருநெல்வேலி - 627 007.

துணைஅமைப்பாளர்கள்-எம். ராஜா,42/6, நடுத்தெரு, தியாகராஜநகர், பாளையங்கோட்டை.எம்ஆண்டியப்பன்.42 ஏ / 54, அம்மன்சன்னதிதெரு, திருநெல்வேலிடவுண்.எஸ். மாரிமுத்து 7/46டி. செல்வம்நகர், நாரணம்மாள்புரம்.கே. மந்திரமூர்த்தி 55, சிவன்கோவில்தெரு, தச்சநல்லூர்.பி. பட்டமுத்து,108,,கருவேலன்குன்றுதெரு, திருநெல்வேலிடவுண்,பி. மாரியப்பன்,54, மாதாசன்னதிதெரு, திருநெல்வேலிடவுண்.

"அண்ணாஅறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 11.08.2023.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்,
தி.மு.க.கலை
இலக்கியப்பகுத்தறிவுப் பேரவை



# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட – மாநில – மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்
## இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

தி.மு.க இளைஞர் அணியின் மாவட்ட – மாநில – மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 13–08–2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில், காணொலிக் காட்சி வாயிலாக, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள் : முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை இளைஞர் அணி சார்பில் கொண்டாடுதல், இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டுப் பணிகள் மற்றும் இல்லந்தோறும் இளைஞர் அணி.**

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 12–08–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் தனியமங்கலம், சாத்தமங்கலம், சருகுவலைபட்டி ஆகிய கிராம பகுதிகள் வழியாக நடைபெற்று வரும் காரைக்குடி நான்குவழிச்சாலை அமைக்கும் பணியில் அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று விவசாய நிலங்களுக்கு சென்று வர ஏதுவாக சாலை அமைப்பது குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா,மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளனர்.

13.08.2023



திருச்சி மாவட்டம்
முன்னாள் முசிறி ஒன்றிய தி.மு.க. செயலாளர்
முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் – முன்னாள் விவசாய கூட்டுறவு வங்கி தலைவர்
முன்னாள் குணசீலம் ஊராட்சி மன்ற தலைவர்

**தே.பொன்னுசாமி**

அவர்களின் மகனும், எங்களது தந்தையுமாகிய

பொதுப்பணிதுறை முன்னாள் உதவி செயற் பொறியாளர்

**P.சேகர் B.E.,**

அவர்களின்

**25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

... என்றும் உங்கள் அன்பில் வம்ச வழித்தடத்தில் நாங்கள் ...

**P.சேகர் அருண் B.A.BGL.,**
தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கூடுதல் அரசு நேர்முக உதவியாளர்

**P.சேகர் முத்தமிழ் B.Tech.,**
Tech.Manager (Str.Design) Zamil Steel Engg Ind pvt.Ltd.Chennai



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் – குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் – பெரிய பணிச்சேரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலையை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., படப்பை ஆ. மனோகரன், ஏ.வந்தேமாதரம், ஜி. காமராஜ், கோல்டு பிரகாஷ், பிரபு கஜேந்திரன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் – குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் – பெரிய பணிச்சேரியில் அழகுற அமைக்கப்பட்டுள்ள 'கலைஞர் படிப்பகத்தினை' கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

## தமிழினத் தலைவர் – முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில்

# 'இந்தியா' வெல்ல-பாசிசம் வீழ உறுதியேற்போம்!

## காஞ்சி வடக்கு மாவட்டம் - பெரியபணிச்சேரியில் கலைஞர் திருவுருவச்சிலை திறப்பு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**காஞ்சிபுரம், ஆக.13-**

**காஞ்சி வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றும்போது "கலைஞர் நூற்றாண்டில் 'இந்தியா' வெல்ல பாசிசம் வீழ உறுதியேற்போம்" என்று உறுதிபடக் கூறினார்.**

**அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-**

இந்தப் பகுதி கழகத்தின் மூத்த முன்னோடி அண்ணன் மிசா பாலகிருஷ்ணன் அவர்களுடைய நினைவுயொட்டி, அவருடைய குடும்பத்திற்கும் என்னுடைய வணக்கத்தை, நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் அவர்களுடைய திருஉருவச்சிலையைத் திறந்து வைக்கின்ற இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் பங்கு பெறுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம்முடைய அமைச்சர் மாவட்டக்கழகச் செயலாளர் அண்ணன் அன்பரசன் அவர்கள் பேசும்பொழுது இது மிகச் சிறிய இடம். அதனால் குறைகள் இருந்தால், பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று என்னிடம் சொன்னார். இடம் சிறியதாக இருந்தாலும், அவருடைய மனம் மிகப்பெரியது.

அவர் நடத்துகின்ற நிகழ்ச்சிகளிலே இதுவரை நான் எந்த குறையும் கண்டதில்லை, அத்தனையுமே நிறைகள்தான். இன்னும் சொல்லப்போனால், ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒருமுறை தேதி கொடுப்பேன். நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்வேன், என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், இந்த மாவட்டத்திற்குப் பத்து நாட்களுக்கு முன்பு தான் நான் வந்திருந்தேன். இப்பொழுது மீண்டும் இந்த மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன் என்றால், அது அன்பரசன் அவர்கள் என் மீது வைத்திருக்கும் பாசம், நான் அன்பரசன் அண்ணன் மீது வைத்திருக்கும் அந்த அன்பு தான், அதற்கு ஒரே காரணம்.

பத்து நாட்களுக்கு முன்பு அவருடைய ஏற்பாட்டில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியத்தில் ஏராளமான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன்.

ஒரு நாள் முழுக்கத் தங்கி இருந்து, இருளர் இன மக்களுக்காக ரோட்டரி சங்கம் கட்டிக் கொடுத்த அந்த வீடுகளை, குயில்குப்பம் கிராமத்தில் நானும், அண்ணன் அன்பரசன் அவர்களும் திறந்து வைத்தோம். அதைத் தொடர்ந்து கலைஞருடைய நூற்றாண்டை முன்னிட்டு, கிராமம் கிராமமாக என்னை அழைத்துச் சென்றார்.

அப்போது சொன்னார் நான் தலைவர் அவர்களை இப்படித்தான் அழைத்துச் செல்வேன். அதேபோல, உங்களையும் நான் அழைத்துச் செல்ல வேண்டும் என்று கிராமம் கிராமமாக என்னை அழைத்துச் சென்று அந்த ஒரே நாளில் இந்த மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 17 இடங்களிலே கழகத்தினுடைய கொடியை ஏற்ற வைக்கும் வாய்ப்பையும் எனக்குப் பெற்றுத் தந்தார் அண்ணன் அன்பரசன் அவர்கள்.

அந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவ்வளவு பிரமாண்டமான நிகழ்ச்சியாக இருந்தது. கழகக் கொடியேற்றுகின்ற அந்த நிகழ்ச்சி. அந்த 17 இடங்களிலும் மக்களைச் சந்தித்து, நான் உரையாடினேன். கிட்டத்தட்ட ஒரு மினி பிரச்சாரம் போல அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அமைந்திருந்தன. அந்த நிகழ்ச்சி மினி பிரச்சாரம் என்றால், இந்த நிகழ்ச்சி கிட்டத்தட்ட ஒரு மாநாடு போல மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு இங்கே நடந்து கொண்டிருக்கிறது.

நம்முடைய அண்ணன் அன்பரசன் அவர்கள். என் மீது உள்ள தனிப்பட்ட பாசத்தினால் தான் இவ்வளவு நிகழ்ச்சிகள் என்னை வைத்து நடத்த முடிகிறது. அதே எழுச்சியோடு கலந்து கொள்ள முடிகின்றது. அதற்கெல்லாம் இன்னொரு முக்கிய காரணம் அண்ணன் அன்பரசன் அவர்கள் இன்று அவர் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சராக இருந்தாலும் அவர் எங்களுடைய இளைஞர் அணியிலே பணியாற்றி, தன்னுடைய உழைப்பைக் கொடுத்துத் தன்னை நிரூபித்து, இப்படிப்பட்ட ஒரு பொறுப்பிற்கு வந்திருக்கிறார், இப்படி ஒரு இடத்திற்கு வந்திருக்கிறார்.

### பணிகளை சிறப்பாகச் செய்யும் அண்ணன் அன்பரசன்!

இன்னும் சொல்லப்போனால், அண்ணன் சொல்வதற்கு முன்பாகவே அண்ணன் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிளைக் கழகம் வரை இளைஞர் அணிக்கு நிர்வாகிகளை நியமித்து, இளைஞர் அணியின் பணிகளை மிகச் சிறப்பாக செய்தார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் – பெரிய பணிச்சேரியில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை – அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலையையும் எழிலுற அமைக்கப்பட்டுள்ள 'கலைஞர் படிப்பகத்தையும்' திறந்து வைத்து, மாபெரும் பொதுக்கூட்டத்தில் எழுச்சியுரையாற்றினார். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன், வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஜி. காமராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், பிரபு கஜேந்திரன் உள்ளிட்டோர் மேடையில் உள்ளனர்.

இளைஞர் அணிப் பணியாக இருக்கட்டும், அது இயக்கப் பணியாக இருக்கட்டும், இந்தக் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஒட்டுமொத்த தமிழகத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அதற்கு இன்னொரு சான்று என்னவென்றால், இங்கே கலைஞர் அவர்களுடைய திரு உருவச்சிலையைத் திறந்து இருக்கிறோம். அதேபோலக் கலைஞருடைய படிப்பகத்தையும் என்னை வைத்து திறந்து வைத்திருக்கிறார். நம்முடைய தலைவர் அவர்கள் மாவட்ட கழகச் செயலாளர் கூட்டத்தில் நேற்று அறிவுறுத்தியிருந்தார்.

இன்று தான் முரசொலியில் அறிவிப்பு வந்தது. ஒவ்வொரு அணிக்கும் மூன்று பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அதில் எங்களுடைய இளைஞர் அணிக்கு மூன்று பொறுப்புகள்.

கலைஞருடைய நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு மூன்று பொறுப்புகள் இளைஞர் அணிக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஒன்று தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மாரத்தான் போட்டி நடத்துவது,

இரண்டாவது பொறுப்பு தமிழகம் முழுவதும் இருந்து சிறந்த மூன்று பேச்சாளர்களை, கழகப் பேச்சாளர்களை உருவெடுத்துக் கொடுக்க வேண்டும்.

மூன்றாவது பொறுப்பு தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் அணியின் சார்பாக, படிப்பகங்கள் திறக்க வேண்டும் என்று மூன்று உத்தரவிட்டிருந்தார். நேற்றுதான் தலைவர் உத்தரவிட்டிருந்தார்.

இன்று அண்ணன் அவர்கள் ஒரு படிப்பகத்தை என்னுடைய கைகளால் திறந்து வைத்து விட்டார்.

### கலைஞரின் கடைசி வார்த்தை "அண்ணா"!

இது மாவட்டக் கழகத்தின் சார்பாக, நீங்கள் செய்திருக்கிறீர்கள். நாங்களும் உங்களை எடுத்துக்காட்டாக, முன்னோடியாக எடுத்துக் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் இதே போன்று படிப்பகங்கள் திறப்பதற்கு எங்களுக்கு அண்ணன் அவர்கள் வழிகாட்டி இருக்கிறார். அதற்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அது மட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் என்னுடைய வாழ்க்கையில் இது மறக்க முடியாத ஒரு நாள். கலைஞருடைய நூற்றாண்டில் நான் திறந்து வைக்கின்ற கலைஞருடைய இரண்டாவது சிலை இது. ஏற்கனவே, கடந்த ஜூலை மாதம் திருவண்ணாமலை மாவட்டத்தில் இதேபோல் கலைஞருடைய உருவச்சிலையை நான் திறந்து வைத்தேன்.

கலைஞருடைய ஊர் திருவாரூர் என்றாலும், அவர் உயிரையே வைத்திருந்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஊர் காஞ்சிபுரம். காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வந்து அவருடைய சிலையைத் திறந்து வைப்பதில் எனக்குக் கூடுதல் பெருமை.

2018 ஆம் ஆண்டு. தான் உயிரையே வைத்திருந்த பேரறிஞர் அண்ணா என்று சொல்கின்றேன் என்றால், 2018 ஆம் ஆண்டு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. அவரால் அப்போது பேசக்கூட முடியவில்லை. மருத்துவர்கள் குடும்பத்தினர்கள் எல்லாம்கூட இருந்து அவர்கள் அவருக்குப் பேச்சுப் பயிற்சி கொடுப்போம். எந்த வார்த்தையும் பேச மாட்டார் ஒரே வார்த்தைதான் கடைசி வரைக்கும் பேசினார்.

அந்த ஒரே வார்த்தை அண்ணா என்கின்ற ஒரு வார்த்தைதான். அது மட்டும் அல்ல, அவருடைய கைகளில் பேனாவைக் கொடுத்து எழுத சொல்லுவோம்.

நம்முடைய தலைவர், மருத்துவர்கள், குடும்பத்தினர்கள் அத்தனை பேரும் கூட இருப்போம். `உங்களுக்குப் பிடித்த வார்த்தை எழுதுங்கள் என்று நான், தலைவர் எல்லாம் கேட்போம். எல்லோருக்கும் ஆசை அவருடைய பெயரை எழுதுவார் என்று. ஆனால் அவர், பேனாவை வாங்கி எழுதக்கூடிய ஒரே வார்த்தை `அண்ணா' என்ற ஒரே வார்த்தைதான்.

எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வருகிற பொழுதெல்லாம் உங்களை யெல்லாம் பார்க்கிற பொழுது என்னையும் அறியாமல் எனக்குள் ஒரு பந்தபாசம், உணர்ச்சி ஏற்படுகின்றது.

உங்கள் ஒவ்வொருவரையும் நான் என்னுடைய அண்ணனாக, என்னுடைய தம்பியாக, உங்களின் குடும்பத்தில் ஒருவனாக உங்களையெல்லாம் நான் பார்க்கின்றேன்.

### அரசின் கடமை மக்கள் சேவையாற்றுவதே!

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில், இன்று நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய சிலையைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பை வழங்கிய அண்ணன் அன்பரசன் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறந்து வைக்காத சிலைகளே இல்லை. மெரினா கடற்கரையில் ஆரம்பித்து, குமரி கடல் வரை ஏராளமான சிலைகளைத் திறந்து வைத்த நம்முடைய கலைஞர் அவர்களுக்கு இன்று நாம் சிலை திறந்து வைத்துள்ளோம்.

இன்னும் சொல்லப்போனால், சிற்பிதான் சிலையைச் செதுக்குவார். இங்கு நவீன தமிழ்நாட்டைச் செதுக்கிய சிற்பிக்கு நாம் சிலை வைத்திருக்கின்றோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடாத துறைகளே இல்லை, செய்யாத சாதனைகளே இல்லை. ஒவ்வொரு துறையிலும் தனி முத்திரையைப் பதித்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் கொண்டு வந்த திட்டங்கள் தலைமுறை தலைமுறையாகத் தமிழ்நாட்டு மக்களை வாழவைத்துக் கொண்டிருக்கின்றன.

கலைஞருடைய திட்டங்களில் சுயமரியாதை இருந்தது, கலைஞருடைய திட்டங்களில் பகுத்தறிவு இருந்தது, கலைஞருடைய திட்டங்களில் பெண் விடுதலை இருந்தது, கலைஞர் ஒருபோதும் தான் செயல்படுத்திய திட்டங்களை அது அரசின் கடமை என்று செய்யவில்லை.

கலைஞர் அவர்களுடைய ஒவ்வொரு திட்டமும் தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதாரத்தையே மாற்றி அமைக்கின்ற திட்டமாக அமைந்தன.

3 கிலோ மீட்டருக்கு ஒரு பள்ளியைத் திறந்தார். சத்துணவுடன் வாரம் முழுக்க ஒரு முட்டை வழங்கினார். மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கினார்.

உயர்கல்விக்கு உதவி தொகை வழங்கினார். முதல் தலைமுறை பட்டதாரிக்கு, கல்வி இலவசம் கொடுத்தார். கைரிக்சா ஒழிப்பு, பிச்சைகாரர் ஒழிப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

தொழிற்சாலைகளைத் திறந்து வைத்தது. கல்லூரிகளைத் திறந்து வைத்தது. பெண்களுக்கு, குடும்பச் சொத்தில் சம உரிமை. உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு. கட்டணமில்லா கேஸ் அடுப்பு இல்லந்தோறும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி. நில மற்றவர்களுக்கு நிலம். மாற்றுத்திறனாளிகளுக்கு வாரியம். திருநங்கைகளுக்கு வாரியம், என கலைஞர் கொண்டு வந்த திட்டங்கள் ஏராளம்.

### தலைவர் கலைஞர் காட்டிய வழியில் தளபதி!

கலைஞருடைய வழியில் நம்முடைய தலைவர் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இந்திய ஒன்றியத்தையே திரும்பி பார்க்கின்ற வகையில் ஒரு சிறப்பான ஆட்சியை இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார். கலைஞர் அவர்கள் இருந்தால், என்னவெல்லாம் சாதனைகள், என்னவெல்லாம் திட்டங்கள் செய்து இருந்திருப்பாரோ, அதைத்தான் இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்களும் செய்து கொண்டிருக்கிறார்.

மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி, அரசு பள்ளி மாணவிகள் கல்லூரி படிக்க வேண்டும் என்றால், மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை. இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48 இப்படிப் பல திட்டங்களை நம்முடைய தலைவர் அவர்கள் அறிவித்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். அரசு தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப் பட்டு வரும் காலை சிற்றுண்டி உணவுத் திட்டம் மிகப்பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. செப்டம்பர் மாதம் முதல் அனைத்துப் பள்ளிகளுக்கும் அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது.

அதேபோல் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மகளிரும் ஆர்வத்தோடு எதிர்பார்த்து இருந்த திட்டம், அதையும் நம்முடைய பேறிஞர் அண்ணாவின் பிறந்தநாளான செப்டம்பர் 15ஆம் தேதி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமும் தொடங்கப்பட உள்ளது. இதன் மூலம் தகுதியான மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட உள்ளது.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, மதுரையில் கிட்டத்தட்ட ரூபாய் 220 கோடி ரூபாய் மதிப்பில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அதேபோல் சென்னையில் ரூபாய் 250 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உருவாக்கினார்கள்.

இப்படிக் கலைஞருடைய நூற்றாண்டை நம்முடைய தலைவர் அவர்களுடைய உத்தரவின் பேரில் மக்களுக்குப் பயன்படும் வகையில் இந்த வருடம் முழுவதும் கொண்டாட இருக்கின்றோம். அதில் ஒரு பகுதியாகத்தான் இன்று இந்தப் படிப்பகமும், சிலையையும் நான் திறந்து வைத்திருக்கின்றேன்.

இதிலிருந்து அ.தி.மு.க.விற்கும் தி.மு.க.விற்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் நன்கு அறியலாம். அ.தி.மு.க.வும் ஆட்சியில் இருந்தாங்க. அப்போது எம்.ஜி.ஆர் அவர்களுடைய நூற்றாண்டை அவர்கள் கொண்டாடினார்கள்.

### மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம்!

நாம் ஒவ்வொரு நிகழ்ச்சி நடத்தினாலும், பொதுமக்களுக்கு ஏதாவது ஒரு நல்ல விஷயம் நடக்கவேண்டும் என்றுதான் நடத்துவோம். இந்தப் படிப்பகம் தொடங்கியிருக்கிறோம் என்றால், மாணவர்களுடைய கல்விக்கு உபயோகமாக இருக்கும்.

எம்.ஜி.ஆரின் நூற்றாண்டை அ.தி.மு.க.வினர் கொண்டாடினார்கள். யாருக்காவது ஏதாவது தொடங்கினார்களா என்று ஞாபகம் இருக்கிறதா? ரூபாய் கோடி கணக்கில் செலவு கடற்கரைச் சாலையில் ஒரே ஒரு வளைவு மட்டும் தான் கட்டினார்கள். வேறு எந்த நிகழ்ச்சியும் நடத்தவில்லை. இதுதான் அ.தி.மு.க.விற்கும் தி.மு.க.வுக்கும் இருக்கக்கூடிய வித்தியாசம்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்